மாகாணக் கல்வித் திணைக்களம்
வடமாகாணம்
2026 இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
பயிற்சிப் பரீட்சை - 2

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

பத்திரம் - I

1 மணித்தியாலம்

5

சுட்டெண் .....

பாடசாலை .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	-
08	-
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
☐ × $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்.	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

www.lkedu.lk

LEARNEASY
KNOWLEDGE IS POWER

Learn Easy இன்
தனித்துவமான
தரம் 5
zoom வகுப்புகள்



தமிழ்


A.வைஸ்னவி

சனி : 8.00pm - 9.00pm
ஞாயிறு : 8.00pm - 9.00pm

கணிதம்


L.கௌஷிகா

சனி : 7.00pm - 8.00pm
ஞாயிறு : 7.00pm - 8.00pm

சுற்றாடல்


D.தாரங்கனி

செவ்வாய் : 7.00pm - 8.00pm
வெள்ளி : 7.00pm - 8.00pm

English


M.தாரணி

வெள்ளி : 8.00pm - 9.00pm

சிங்களம்


K.தர்மினி

புதன் : 7.00pm - 8.00pm

நுண்ணறிவு-IQ


L.கௌஷிகா

செவ்வாய் : 8.00pm - 9.00pm
புதன் : 8.00pm - 9.00pm

வினாத்தாள்

பகுதி 1 **L.கௌஷிகா** — வியாழன் : 8.00pm - 9.00pm

பகுதி 2 **D.தாரங்கனி** — திங்கள் : 8.00pm - 9.00pm

- ஒவ்வொரு மாணவரின் மீதும் தனிக்கவனம் செலுத்தப்படும்.
- Recording மற்றும் வினாத்தாள் pdf வழங்கப்படும்.
- அனைத்து பாடங்களும் சேர்த்து மாதம் **2,500/-**
- விரும்பிய பாடங்களை மட்டும் தெரிவு செய்து படிக்கும் வசதியும் உண்டு.

அனுமதிக் கட்டணம்
1,000/-

zoom ONLINE CLASSES

அழையுங்கள் : 0766674945

01. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B ல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை யாது?

A 

B 

1) 2 2) 4 3) 3

02. ஒரு தொகுதியில் உள்ளடக்குவதற்கு மிகப் பொருத்தமான இரண்டு பொருட்களும் எவை?



A B C D E

1) A உம் B 2) E உம் C 3) A உம் C

03. பின்வரும் உருக்களில் காட்டப்படும் பிராணிகளை அவற்றுக்கிடையே உள்ள சிறந்த தொடர்பின் அடிப்படையில் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கத்தக்க முறை யாது?



A B C D

1) A,C உம் B,D உம் 2) A,D உம் B,C உம் 3) A,B உம் C,D உம்

04. பின்வரும் உருக்களில் காட்டப்பட்டுள்ள திண்ம உருக்களில் ஒன்றிற்கு மாத்திரம் பொருந்தக்கூடியது?



1) நேரான விளிம்பு 2) தட்டையான முகம் 3) வளைந்த மேற்பரப்பு

05. பின்வரும் அடைப்பில் உள்ளவை மிகவும் அர்த்தமுள்ள விதத்தில் காட்டப்பட்டுள்ள உரு யாது?





1) 2) 3)

www.lkedu.lk

06. தரப்பட்ட இரு உருக்களையும் அவதானியுங்கள்

உரு A, உரு B ஆகிய இரண்டு உருக்களிலும் உள்ள சிறிய முழுச் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

உரு A  உரு B 

1) 11 2) 12 3) 16

07.  தரப்பட்ட உருக்கள் எல்லாவற்றையும் அதே அளவில் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய தனி உரு யாது?

1)  2)  3) 

08. கீழே பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நாணயங்கள் நான்கு வீதம் வைக்கப்பட்டுள்ளன. ஒரு குவியலில் இருந்து எல்லா நாணயங்களையும் மற்றய குவியலில் இருந்து ஒரு நாணயத்தையும் எடுத்து ஆக்கக்கூடிய, ஆகக்கூடிய தொகை





1) 35 ரூபாய் 2) 45 ரூபாய் 3) 30 ரூபாய்

09.

	5	8
8	7	5
4	7	9

தரப்பட்ட இலக்க அட்டையில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட எத்தனை மூவிலக்க எண்களை உருவாக்கலாம்.

1) 6 2) 8 3) 4

10. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது யாது?

பசுமை பட்டு போர்த்தும் பூமி
அழகாய் ஆடும் காற்றின் தோழி
பூமியின் இதயம் போல திகழ்பவை
வாழ்வின் தூணாய் நிற்பவை

1) நதிகள் 2) மரங்கள் 3) மழை

11. சம தளத்தில் வரையப்பட்டுள்ள சதுரத்தின் மூலைகளில் A,B,C,D ஆகிய நால்வரும் நின்ற ஒழுங்கினை உரு காட்டுகின்றது. அவர்கள் நால்வரும் வலஞ்சுழியாக ஒவ்வொரு வட்டத்திற்கும் சம வேகத்தில் இடம் மாறுகின்றனர். இதன்படி மூன்றாவது தடவையில் B இற்கு எத்திசையில் D நிற்பார்.?





1) கிழக்கு 2) தெற்கு 3) வடக்கு

www.ikedu.lk

12. தரப்பட்ட இவ்வுருவினை முறிகோடுகள் வழியே இரண்டாக வெட்டும் போது கிடைக்கும் வெட்டு முகத்தின் வடிவம் யாது?



1) 

2) 

3) 

13. சதுரவடிவக் கடதாசி ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே சிறு முக்கோணி வெட்டி எடுக்கப்பட்டுள்ள விதத்தை உரு A காட்டுகிறது. அக்கடதாசியினை விரிக்கும் போது பெறும் வடிவத்தை தெரிவு செய்க.



உரு A

1) 

2) 

3) 

14. இரும்புத் தொழிலாளி 1 m நீளமான கம்பியை இரண்டு துண்டுகளாக வெட்டுவதற்கு ரூபாய் 50.00 ஐப் பெறுகிறார் எனின் அதே அளவுடைய இரண்டு கம்பிகளை 10 துண்டுகளாக வெட்டுவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?

1) ரூபா. 400.00 2) ரூபா. 450.00 3) ரூபா 500.00

15. தரப்பட்டுள்ள உருவை தடித்த கோடுகள் வழியே மடித்து (•) புள்ளி வெளியே இருக்குமாறு பெட்டி ஒன்று தயார் செய்யப்பட்டது. அப் பெட்டியை சரியாகக் காட்டும் உரு எது?



1) 

2) 

3) 

16. குறித்த வருடம் ஒன்றில் ஜனவரி மாதத்தில் 6, 12, 19 என்னும் மூன்று திகதிகள் வரும் தினங்களில் இரண்டு தினங்கள் புதன்கிழமையாகும் எனின் மற்றைய தினம் எந்த நாளாகும்.

1) புதன் 2) வியாழன் 3) சனி

17. சூரியன் நன்றாக உதித்துள்ள ஒரு காலை வேளையில் ரமணன் பாடசாலை செல்லும் போது அவனது நிழல் அவனுக்கு முன்னே சென்றது. அதே வேளை ரமணனிற்கு எதிர்த்திசையில் கண்ணன் வந்து கொண்டிருந்தான். எனின் கண்ணனின் நிழல் கண்ணனிற்கு விழும் பக்கம் யாது?

1) வலது பக்கம் 2) பின்பக்கம் 3) இடது பக்கம்

www.lkedu.lk

18. பின்வரும் தகவல்களை கருத்தில் கொண்டு விடையைத் தெரிவு செய்க.
மணி ஒன்றின் ஒலி முதல் தடவை பி.ப 2.45 இற்கு ஒலித்தது. இரண்டாம் தடவை பி.ப 3.15இற்கும் நான்காம் தடவை பி.ப 4.15இற்கும் ஒலித்தது எனின் 6ஆவது தடவை மணி ஒலிக்கும் நேரம் யாது?

1) பி.ப. 5.15 2) பி.ப.5.30 3) பி.ப. 4.45

19. அடுத்து வரும் மூன்று இரட்டை எண்களின் கூட்டுத்தொகை 18 ஆகும். அவ் எண் வரிசையில் இடையில் வரும் ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

1) 12 2) 16 3) 15

20. ஒரு வகுப்பில் உள்ள 12 மாணவர்களில் கண்ணனை விட வயதில் கூடியவர்கள் மூவர் உள்ளனர். இருவர் மட்டும் கண்ணனின் வயதை ஒத்த வயதினர் இதற்கேற்ப கண்ணனிலும் வயது குறைந்தவர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

1) 3 2) 6 3) 5

21. 

உருவில் உள்ள முக்கோணிகளினதும் சதுரங்களினதும் எண்ணிக்கை முறையே

1) 3,1 2) 4,1 3) 4,2

22. தரப்பட்ட எண்கோலத்தில் ? இடப்பட்ட இடத்தில் வரும் எண் யாது?



1) 8 2) 7 3) 11

23. 

இவ்வாறான இரு உருக்களை மேசை ஒன்றின் மீது வைக்கும் போது மேசையுடன் தொடுகையுறாத முகங்களின் எண்ணிக்கை யாது?

1) 4 2) 8 3) 6

24. முறிந்த கோடுகளினால் காட்டப்பட்டுள்ள மூன்று பாதைகளில் நீளம் குறைந்த பாதை எது?

1) 

2) 

3) 

www.lkedu.lk

25. 

 ஆகிய உருக்களை இடமிருந்து வலமாகவும்  ஆகிய உருக்களை மேலிருந்து கீழாகவும் அமையுமாறு கட்ட வலையமைப்பை நிரப்பினால் நான்காவது நிரலில் மேலிருந்து கீழாக அமையும் இரு உருக்களும் எவை?

1) 
2)
3)

26. ஒரு பையினுள் 6 கறுப்பு நிறப் பேனைகளும் 4 நீலநிறப் பேனைகளும் உள்ளன. ஒரு தடவைக்கு 2 கறுப்பு பேனைகளும் 1 நீலப் பேனையும் வெளியே எடுக்கப்படுகின்றன. இதே முறையில் எத்தனை தடவைகள் அப்பையில் இருந்து பேனைகளை எடுக்க முடியும்?

1) 3தடவை 2) 2தடவை 3) 4தடவை

27. செவ்வக வடிவ தாள் ஒன்று உரு 1 இல் காட்டியவாறு ஆறு சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதன் ஒவ்வொரு பகுதிக்கும் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம், ஊதா, கறுப்பு என்றவாறு நிறம் தீட்டப்பட்டுள்ளது. உரு 2 இல் காட்டியவாறு இரண்டு சம பகுதிகளாக நிறங்கள் வெளியே தெரியும் படி மடிக்கப்படுகின்றது.



உரு1



உரு2

இப்பொழுது ஊதா நிறத்திற்கு எதிரே இருக்கும் நிறம் யாது?

1) மஞ்சள் 2) சிவப்பு 3) பச்சை

28. நிமிடத்திற்கு 50 m என்னும் சீரான வேகத்தில் நடக்கும் ஒருவர் குறித்த ஒரு சதுர வடிவ பூம்பாத்தியைச் சுற்றி வர 8 நிமிடங்கள் தேவைப்பட்டன எனின் அப் பூம்பாத்தியின் ஒரு பக்க நீளம் யாது?

1) 100 m 2) 150 m 3) 50 m

29. பின்வரும் இரு தளவுருக்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள சுற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.


A


B

1) இரு உருக்களினதும் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை சமமானது
2) இரு உருக்களின் நீள அகலங்கள் சமனானவை
3) இரு உருக்களினதும் செங்கோணங்களின் எண்ணிக்கை சமனானவை

30. 12/ கொள்ளளவுள்ள தொட்டி ஒன்றிற்கு ஒரு குழாய் மூலம் நிமிடத்திற்கு 2/ நீர் உட்செலுத்தப்படுகின்றது. அத் தொட்டியானது முதலில் முதலாக எத்தனை நிமிடங்களில் அதன் அரைவாசிக்கு நிரம்பும்

1) 6நிமிடங்களில் 2) 5நிமிடங்களில 3) 3நிமிடங்களில்

www.ikeu.lk

31. கீழே தரப்பட்டுள்ள A, B ஆகிய சம அளவான ஒளி ஊடு புகவிடும் அட்டைகளையும் அதன் படிமுறைகளையும் கவனிக்க



உரு A



உரு B

1. உரு A இல் உள்ள மூன்றாவது வடிவத்திற்கு வர்ணம் தீட்டுக.
2. உரு A மீது உரு B யை வைக்க
3. பின்னர் + வடிவம் முதலாவதாக அமையுமாறு வலஞ்சுழியாக சுற்றுக.

இப்போது உருக்களின் வடிவங்கள் தோன்றும் விதம் யாது?

1) 

2) 

3) 

32. சுவர்க்கடிகாரம் ஒன்றின் இரு முட்களுக்கிடையிலான கோணம் செங்கோணத்தை விடப் பெரிய கோணத்தைக் காட்டியது. அக்கடிகாரம் ஆகக் குறைந்தது எத்தனை நிமிடங்களுக்கு முன்னர் செங்கோணத்தைக் காட்டியிருக்கும்

1) 1 நிமிடம் 2) 10 நிமிடம் 3) 15 நிமிடம்

33. பின்வரும் தகவல்களை அடிப்படையாக கொண்டு சரியான விடையைத் தெரிவு செய்க.

பந்து	1	90.00
பொம்மை	3	

பந்து	1	70.00
பொம்மை	2	

இரண்டு பந்துகளினதும் நான்கு பொம்மைகளினதும் மொத்த விலை யாது?

1) ரூபாய் 160.00 2) ரூபாய் 120.00 3) ரூபாய் 140.00

34. அமல், நிமல், சமல் மூவரும் நண்பர்கள். அவர்களின் சகோதரர்களான ரகு. விது, சது ஆகியோரும் உள்ளனர். நிமல் கடைக்குச் செல்ல அவனது நண்பனின் சகோதரனையும் கூட்டிச் சென்றான். அமலும் சதுவும் சகோதரர்கள் அல்ல ரகுவும் நிமலும் சகோதரர்கள் எனின் சமலின் சகோதரனாக கருதப்படக்கூடியவர் யார்?

1) சது 2) விது 3) ரகு

35. P,Q,R,S ஆகிய நால்வரில் Q இலும் வயது கூடியோர் இருவர் மட்டும் உள்ளனர் R இலும் வயது குறைவானோர் இருவர் மட்டுமே உள்ளனர். ஏனைய இருவர்களின் வயது தொடர்பான சரியானகூற்று யாது?

1) நிச்சயமாக P மூத்தவராகவும் S இளையவராகவும் காணப்படுவர்
2) நிச்சயமாக S மூத்தவராகவும் P இளையவராகவும் காணப்படுவர்
3) P, S ஆகிய இருவரில் ஒருவர் மூத்தவராகவும் மற்றையவர் இளையவராகவும் காணப்படுவர்

www.lkedu.lk

36. 178, 153, 169, 147 ஆகிய நான்கு எண்களையும் ஏறுவரிசைப் படுத்தும் போது கிடைக்கும் 1 ஆம் எண்ணினதும் 4ஆம் எண்ணினதும் கூட்டுத் தொகை யாது?

1) 316 2) 225 3) 325

37. மாலை நேரங்களில் மத்திய, வடமேல் மாகாணங்களில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்யுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இவ் அறிவுறுத்தலுக்கு அமைய மழை பெய்யக்கூடிய இரு நகரங்கள்.

1) மாத்தளை, புத்தளம் 2) நுவரெலியா, மாத்தறை 3) கண்டி, பதுளை

38. A, C, B ஆகிய மூன்று இயந்திரங்கள் ஒரு நாளில் இயங்கிய நேர அளவுகள் கட்டங்களால் வகைகுறிக்கப்பட்டுள்ளன.



இதற்கேற்ப சரியான கூற்றைத் தெரிவு செய்க.

1) இயந்திரம் A ஐ விட இயந்திம் B குறைவான நேரம் இயங்கியுள்ளது.
2) இயந்திரம் B ஐ விட இயந்திம் C குறைவான நேரம் இயங்கியுள்ளது.
3) இயந்திரம் C ஐ விட இயந்திம் A கூடுதலான நேரம் இயங்கியுள்ளது.

39. சரியாக நடுப்பக்கத்தில் இணைக்கும் கம்பியைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட 40 பக்கங்களை கொண்ட அப்பியாசப் புத்தகத்தில் 12ம் பக்கத்திற்குரிய தாள் முழுமையாக கிழித்து அகற்றப்படும் போது அதனுடன் புத்தகத்தில் இருந்து கழன்று விழக்கூடிய வேறு தாளுக்குரிய பக்க இலக்கம் எது?

1) 28 2) 29 3) 3(

40. உருவில் காட்டியவாறு A,B,C ஆகிய மூன்று சங்கிலித் துண்டுகள் ஒரு நீளச் சங்கிலியாக பொருத்தப்பட்டால். அதனைச் சரியாகக் காட்டும் உரு யாது?



1) 

2) 

3) 

www.ikedu.lk

සියලුම හිමිකම් ඇවිරිණි | முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved |

NP/Pri/G4/Ex/01-Part-ii

மாகாணக் கல்வித்திணைக்களம்
வடக்கு மாகாணம்
2026 ல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
பயிற்சிப் பரீட்சை-2

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை

பத்திரம் - II

1 மணி 15 நிமிடங்கள்

5

சுட்டெண் .....

பாடசாலை .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
- சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கூறப்பட்ட ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- சரியான விடை எழுதப்படவேண்டிய ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்குக.

விடைத்தாள் பரீட்சகருக்கு மட்டும்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	

இலக்கத்தில்	
எழுத்தில்	

முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கு அமைவாக வினாத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டது. என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்	---------- பெயர் ---------- ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் மதிப்பீடு சரியென்பதனை உறுதிப்படுத்துகின்றேன்	---------- ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கப்பட்ட புள்ளிகள் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	---------- ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்யப்பட்டது.	---------- ஒப்பம்
வலய / மாகாண மேற்பார்வையாளர்	---------- ஒப்பம்

www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

Learn Easy

Online School

ONLINE (ZOOM) CLASS



"உங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுள்ள, நம்பிக்கையான, இலங்கையின் முண்ணணி தரமான online (ZOOM) கல்வி நிறுவனம்

Learn Easy

மட்டுமே !"

- தரமான கற்பித்தல்
- ZOOM வகுப்புகள்
- பதிவு வீடியோக்கள்
- வினாத்தாள் PDF
- தனிப்பட்ட கவனம்

தரம் 1

தொடக்கம்

A/L

வரை

வகுப்புகள் நடைபெறுகின்றன.

அழையுங்கள் : **0766674945**

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

கடற்கரைக்காட்சி என்பது மனத்திற்கு விருந்தளிக்கும் ஓர் அழகிய இயற்கைக் காட்சி ஆகும். காலை வேளையில் கடலில் இருந்து எழும் சூரியன் வானில் அழகான வண்ணக் கோலங்களை உருவாக்குகின்றான். கடலின் கரையைத் தழுவிச் செல்லும் அலைகளின் ஒலி காலையில் கடற்கரையில் நடப்பவர்களுக்கு இதமான அனுபவத்தைத் தருகின்றன. மாலையில் சூரியன் கடலுக்குள் மெல்ல மெல்ல மறைந்து போகும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். கடற்கரைக்காட்சி மனதிற்கு புத்துணர்ச்சியையும் அமைதியையும் தருகின்றது.

பந்தியைத் துணையாகக் கொண்டு விடை தருக.

1. மனதிற்கு விருந்தளிக்கும் இயற்கைக் காட்சி எது?

   .....

2. காலையில் கடலில் இருந்து எழும் சூரியன் வானில் எதனை உருவாக்குகின்றான்?

   .....

3. பந்தியில் வந்த அடுக்குமொழிச் சொல்லை எழுதுக.

   .....

4. கடற்கரையில் நடப்பவர்களுக்கு இதமான அனுபவத்தை தருவது எது?

   .....

5. செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச்சொல்லை எழுதுக.

   .....

6. புத்துணர்ச்சி எனும் சொல்லை பிரித்து எழுதுக?

   .....

02. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

1. சந்தையில் காய்கறிகள் விற்கப்பட்டன. ( )
2. மேசையில் கடதாசிகளும் கொப்பிகளும் பரவிக் கிடந்தது. ( )
3. நேற்று வீசிய காற்று பல மரங்களை முறித்தது. ( )
4. நானும் என் நண்பர்களும் சந்தோசமாக இருந்தேன். ( )

03. இடைவெளி நிரப்புக.

1. தவளை பேத்தை போல மீன் .....
2. புல் தாள் போல பனை .....

04. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. மரங்கள் ..... (கடகட, சடசட) என்று முறிந்து விழுந்தன.
2. எனது காலில் உள்ள காயம் ..... (விறுவிறு, சுறுசுறு) என வலித்தது.

www.lkedu.lk

05. **பின்வரும் கருத்திற்குப் பொருத்தமான பழமொழியை எழுதுக.**

1. எவருக்கும் தம் பொருள் சிறந்தது.

.....

2. மனச்சாட்சி உறுத்தும்.

.....

06. **சுருக்கக் குறியீட்டை விரித்தெழுதுக.**

1. கி.பி. ..... 2. பி.கு. .....

07. **பின்வரும் சொற்களுக்கு எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.**

1. பேரன் ..... 2. மனைவி - .....

08. **அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுக.**

(உழவன், போவார்கள், சென்றது, அழும், நீங்கள்)

1. அ:றிணை எதிர்கால வினைச்சொல் - .....
2. உயர்திணை ஒருமை பெயர்ச்சொல் - .....

09. **பின்வரும் தொடர்மொழிக்குரிய ஒரு மொழியை எழுதுக.**

ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - .....

10. **சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக மாற்றுக**

கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக / கொண்டால்

.....

11. **ஒவ்வொரு உருவுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தரப்பட்டுள்ள கூட்டினுள் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1. 

2. 

12. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக**

1. a Pet? / have / you / Do ..... 2. School / come / bus / to / I / by .....

13. **ஒவ்வொரு சிங்களச் சொல்லுக்கும் உரிய தமிழ் கருத்தை எழுதுக.**

1. කොහෙද? ..... 2. පිච්සමල .....

14. **பின்வரும் தமிழ்ச் சொல்லை சிங்களத்தில் கூறும் முறையைத் தமிழில் எழுதுக.**

1. திறவுங்கள் ..... 2 பால் வெள்ளை நிறம் .....

www.ikedu.lk

15. 

எண்சட்டத்தில் குறிப்பிடப்படும் எண்ணிலிருந்து ஒன்றைக் கழித்து வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.

.....

16. 6850, 6805, 6856 எனும் மூன்று எண்களையும் இறங்கு வரிசைப்படி ஒழுங்கு முறையில் எழுதுக.

.....

17. றம்புட்டான் பழங்கள் 32 இல் நான்கில் மூன்று பங்கு (3/4) றம்புட்டான் பழங்கள் எத்தனை?

.....

18 இந்த எண்கோலத்தில் இடைவெளியில் வரவேண்டிய இரண்டு எண்களை எழுதுக.

..... , 24 , 28 , 32 , ... , 40

19. ஒருவருக்கு 3 புத்தகங்கள் வீதம் 35 பேருக்கு பகிர்வதற்குத் தேவையான புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.....

20.  உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை தசம எண்ணில் எழுதுக.

.....

21. ஒரு பாத்திரத்தில் உள்ள பாலில் 1 லீற்றர் 250 மில்லி லீற்றரை அகற்றிய பின்னர் எஞ்சியிருந்த பாலின் அளவு 3 லீற்றர் 50 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்தில் முதலில் இருந்த பாலின் அளவு யாது?

..... லீற்றர்.....மில்லிலீற்றர்

22. கமலன் மு.ப 9.00 மணிக்கு படிக்க ஆரம்பித்தான். அதே நாள் மு.ப 11.00 மணிக்கு படித்து முடித்தான். கமலன் படிப்பிற்காக செலவழித்த காலம் எவ்வளவு?

..... மணித்தியாலங்கள்

23. 

மிகக் குறைந்த எண்ணிக்கையான சமச்சீர் கோடுகள் வரையக் கூடிய வடிவத்திற்குரிய ஆங்கில எழுத்து எது?

.....

24. 9m 50cm நீளமுள்ள றிபன் நாடாவில் இருந்து 7m 25cm பகுதியொன்றை வெட்டி நீக்கினால் எஞ்சிய பகுதியின் நீளம் எவ்வளவு?

.....m .....cm

25. முக்கோண வடிவமுள்ள நான்கு முகங்களைக் கொண்ட திண்மப் பொருளில் உள்ள விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

.....

26. அப்பா பழக்கடையொன்றில் இரண்டு அன்னாசிப் பழங்களை வாங்கினார். அவற்றின் நிறைகள் தனித்தனியாக 2kg 650g உம் 3kg 700g உம் ஆகும். இரு பழங்களினதும் மொத்த நிறை யாது?

..... kg..... g

www.1kedu.lk

27. ரூபாய் 100 இற்கு சித்திரப் புத்தகம் ஒன்றும் ரூபாய் 50 இற்கு நிறப்பெட்டி ஒன்றும் கொள்வனவு செய்து ரூபாய் 200 ஐ கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

ரூபாய்.....

28. 

படத்தில் காணப்படும் ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் விசேட பெயர்களை எழுதுக.

A- ..... B- .....

29. **பின்வரும் வரைபில் மாணவர் குழுவிலுள்ள ஒவ்வொரு மாணவரும் மிகவும் விரும்பும் நிறங்கள் பற்றிய தகவல்கள் காட்டப்பட்டுள்ளன.**



I. மஞ்சள் நிறத்தை விட பச்சை நிறத்தை எத்தனை மாணவர்கள் கூடுதலாக விரும்புகின்றனர்?

.....

II. குழுவில் 48 மாணவர்கள் இருந்தால் நீல நிறத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை வரைபில் வரைக.

(32 புள்ளிகள்)

30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

30. குழுவாக வேலை செய்யும் போது பின்பற்ற வேண்டியது எது?

i. தனது விருப்பப்படி வேலை செய்தல்

ii. தனித்தனியாக வேலை செய்தல்

iii. பங்கு பற்றுதலுடன் வேலை செய்தல்

31. பின்வருவனவற்றுள் புரத உணவுகளுக்குள் உள்ளடங்குவது?

i. மீன் , பூசனி ii. காளான் , முட்டை iii. பருப்பு , சோறு

www.ikedu.lk

32. உணவு பழுதடைவதற்குக் காரணமான சூழற்காரணி எது?

i. உணவுகளை மூடாது வைத்தல்

ii. அதிக சூரியஒளி படுதல்

iii. பாதுகாப்பான இரசாயனங்கள் இடுதல்

33. சகல சமய பக்தர்களும் ஈடுபடும் யாத்திரை அல்லாதது?

I. சிவனொளிபாதமலை யாத்திரை ii. கதிர்காம யாத்திரை iii. மிகிந்து ஊர்வலம்

34. பின்வருவனவற்றுள் தனியார் நிறுவனமாகக் கருதக்கூடியது எது?

i. பிரதேச செயலகம் ii. சிறப்பு அங்காடி iii. நகரசபை

35. வைகாசி மாதம் பூக்கும் தாவரம்

I. ஓக்கிட் ii. விளா iii. நாவல்

36. சூழல் மாற்றத்தை அறியத்தரும் பிராணி

i. எறும்பு ii. ஆந்தை iii. காகம்

37. சுண்ணாம்பினைப் பயன்படுத்தி ஆக்கப்படும் பொருள் எது?

i. துடைப்பான் ii. பிணைகருவி iii. வெண்கட்டி

38. நீர் வளத்தைப் பாதுகாப்பதில் பெரிதும் துணையாக அமைகின்ற வழிமுறையாக அமையாதது

i. நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்

ii. காடழித்தல்

iii. புதிய மரக்கன்றுகளை நடுதல்

39. பனிக்கட்டியை உருகாது நீண்டநேரம் பேணுவதற்கு செய்யக்கூடிய முறை

i. மரத்தூளைப் பரவி மூடிவிடுதல்

ii. தண்ணீரில் இடுதல்

iii. உப்பு நீரில் வைத்துப் பேணுதல்

40. உள்ளூர்க் கடிதமொன்றை அனுப்புவதற்கு இடவேண்டிய தபால் பெட்டியின் நிறம்?

i. நீலம் ii. சிவப்பு iii. பச்சை

41. புதிய கோழி முட்டை ஒன்று பாத்திரத்தில் உள்ள நீரில் மிதக்கும் விதம் கீழுள்ள படத்தில் காட்டப்படுகிறது. இப்பாத்திரத்தில் இருப்பது?

i. சுத்தமான குளிர்நீர்

ii. உப்புக் கலந்த நீர்

iii. சுத்தமான சூடான நீர்



42. கீழே தரப்பட்ட உலர் மின் இணைப்பில் ஒளிரக் கூடிய சந்தர்ப்பம்

i. 

ii. 

iii. 

www.lkedu.lk

43. நாம் பணம் செலுத்திச் சேவையைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம்.
   i. பேருந்தில் பயணிக்கும் போது
   ii. பாடசாலையில் பாடநூல்களை வகுப்பாசிரியரிடம் பெறும்போது
   iii. ஆதார வைத்தியசாலையில் நோய்க்கு மருந்து எடுக்கும் போது

44. இப்பாத்திரத்தை யன்னலுக்கு அருகில் வைத்துச் சிலநாட்களின் பின்னர் பார்த்த போது பயற்றம் விதை ஒன்றேனும் முளைத்திருக்கவில்லை. இதற்கான காரணம்
   i. சூரிய ஒளி இல்லாதிருந்தமை
   ii. வளி இல்லாது இருந்தமை
   iii. நீர் இல்லாதிருந்தமை



45. துருத்தி பயன்படும் சந்தர்ப்பம்
   I. தச்சுத்தொழில் ii. கொல்லன் பட்டறைத் தொழில் iii. சுரங்கத்தொழில்

46. வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றி கொள்ளும் முறை
   i. ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்தாமை
   ii. சுயநலமாக செயலாற்றுதல்
   iii. ஏனையோருடன் நட்புடன் செயலாற்றுதல்

47. இலங்கையில் தேசியப்பறவை இலங்கையில் தேசியமரம் என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க
   i. நாகமரம், காட்டுக்கோழி ii. காட்டுக்கோழி, நாகமரம் iii. நீலோற்பலம், காட்டுக்கோழி

48. பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று
   i. உணவு கிடைத்தல் ii. பாதுகாப்புக் கிடைத்தல் iii. பசளை கிடைத்தல்

49. பெலிக்கன் பாதசாரி கடவையில் சிவப்பு மனிதன் தோன்றினால் யாது நிகழ வேண்டும்.
   i. பாதசாரி தரித்து நிற்க வாகனம் செல்ல வேண்டும்
   ii. வாகனங்கள் தரித்து நிற்க பாதசாரிகள் பாதையைக் கடக்க வேண்டும்.
   iii. வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும்.

50. சுய சுத்தத்திற்காக செய்யக்கூடியது
   i. வீட்டைக் கூட்டி துப்பரவு செய்தல்
   ii. முற்றத்தில் உள்ள களைகளைப் பிடுங்குதல்
   iii. நகம் வெட்டுதல்

51. முளைப்பதற்கு அதிக நாட்கள் எடுக்கும் வித்துக்களின் கூட்டம்
   i. கௌப்பி , பயற்றை ii. பயறு , கடுகு iii. மா , புடோல்

52. கடுகண்ணாவை அம்பலம் அமைந்துள்ள மாவட்டம் எது?
   i. பதுளை ii. கண்டி iii. மாத்தளை

53. ஊசித்துளைக் கமராவில் பொருளொன்றை அவதானிப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய திரையின் பொருத்தமான நிறம் எது?
   i. வெள்ளை ii. கறுப்பு iii. சிவப்பு

www.1kedu.lk

54. படத்தில் காட்டப்பட்டுள்ள பரிசோதனை எதனை அவதானிப்பதற்காகச் செய்யப்படுகின்றது?



i. நீர் வழிந்தோடும் தன்மையை அறிதல்
ii. மழை நிலத்தில் விழும் போது மண்ணில் ஏற்படும் மாற்றங்களை அறிதல்
iii. பூங்கன்றுகளுக்கு நீர் ஊற்றுதல்

55. நவலங்கா சமயப் பாடசாலை, ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியவர்?

i. C.W.W. கனன்ங்கரா ii. ஆதர் C. கிளார்க் iii. வண.S. மகிந்ததேரர்

56. அரசின் அவசரத் தகவலொன்றினை நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கக் கூடிய ஊடகம்?

i. பத்திரிகை ii. சுவரொட்டி iii. வானொலி

57. பின்வருவனவற்றுள் ஒளடத பானம் தயாரிக்கப்பயன்படும் பூக்கள்

i. பொன்னாவரைப் பூ , வில்வம் பூ
ii. அகத்திப் பூ , வில்வம் பூ
iii. செவ்வரத்தைப் பூ , வாழைப்பூ

58. 

தரப்பட்ட படத்தை அவதானித்து விடை தருக. உபகரணத்தினால் பொருளின் மீது விசை பிரயோகிக்கும் இடம்?

i. A ii. B iii. C

59. வீட்டுத்தோட்டப் பயிர்களை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளும் சூழல்நேய நடவடிக்கை எது?

i. இரசாயனப் பசளை இடுதல் ii. பூச்சிகளை விரட்டத்தக்க தாவரங்களை நடுதல்
iii. கிருமிநாசினி தெளித்தல்

60. பின்வரும் கதைப் படங்களை அவதானித்து நடந்திருக்கக் கூடிய விடயங்களை மூன்று வாக்கியங்களில் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத், தொடர்பு எழுத்துக் கூட்டல் என்பவையும் சரியாக இருத்தல் வேண்டும்.)



.....

.....

.....

.....

www.lkedu.lk